# திருவள்ளுவர் வரையறுத்த துறவிகளின் கட்டுப்பாடுகள்

**முனைவர் கு.கண்ணுமுத்து**

**இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறை**

**அரசுகலைக் கல்லூரி (த), கரூர்-639005**

1

**ஆய்வுச் சுருக்கம்**

மனித இயற்கைக்கு மீறிய இத்தகைய பொறுமையும் பண்பும் உள்ளவர்களே உண்மையான துறவிகள் ஆவர். இவர்களே சான்றோர்கள். எல்லா நற்குணங்களும், அறிவும் நிரம்பியவர்கள் என்று வள்ளுவர் கூறினார். மக்களிடையே பகைமை வளராதிருக்க இவ்வழியே சிறந்த வழியாகும். இவ்வழியை பின்பற்றினால் மக்களிடையே பகைமை வளராதிருக்கும். ஒரு காலத்திலே துறவிகளுக்கு நல்ல மதிப்பிருந்தது. அவர்கள் ஆண்டவன் அருளை பெற்றவர்கள் என்று மக்கள் நம்பி வந்தனர். இவற்றை ஆராய்வதே ஆய்வின் நோக்கமாகும்

**முன்னுரை**

ஐந்து புலன்களையும் அடக்கும் ஒருவனே துறவியர். விடவேண்டிய அனைத்தையும் விட்டுவிட்டால் துறவு சிறக்கு; என்று,

**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒழுங்கு (குறள் எண்-343)**

என்ற பாடல் மூலம் வள்ளுவர் உணர்த்துகிறார். மேலும் நான் எனது எனும் ஆணவம், பற்று விட்டவர்கள் வானோர்க்கும் மேலான புகழை அடைவர். முற்றும் துறந்தவரே துறவிகளுள் தலைவர். மற்றவர் தேவையில்லாமல் அறியாமை வலையினுள் சிக்கித்தவிப்பவர்கள் என்ற கருத்தையும் கூறுகிறார்.

வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு என்ற இயேசுநாதர் கூறினார். அதற்கு மேல்ஒருபடி அதிகமாக வள்ளுவர் கூறியது துன்பம் செய்தவனுக்கு நன்மை செய் என்பதாகும். அவன் செய்த துன்பத்தை மறந்து விடு என்றும்

உரைக்கின்றார்.

உலகம் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். அவர்களுடைய தவவலிமையினாலும் வேண்டுதலினாலும் மழை பெய்கின்றது. நிலம் விளைகின்றது. நாடு செழிக்கின்றது. மக்கள் நோய் நொடியில்லாமல் வாழ்கின்றனர் என்று பெரும்பாலான மக்கள் நினைத்தார்கள். அதையே நம்பினார்கள். ஆகையால் துறவிகளை ஆதரிக்க வேண்டியது அவர்களுக்கு ஒரு துன்பமும் உண்டாகாமல் பாதுகாக்க வேண்டியது இல்லறத்தாரின் கடமை என்று எண்ணி வந்தனர். தன்னலம் கருதாமல் பொது நன்மைக்கு உழைத்த துறவிகளும் இருந்தனர். உலக இன்பத்தை நுகரும் ஆசையைத் துறந்து, ஆத்ம சாந்தியின் பொருட்டு இறைவனை எண்ணித் தவம் புரியும் துறவிகளும் இருந்தனர்.

**கலைச்சொற்கள்**

**1.மாசு -குற்றம் உள்ள**

**2.குற்றமற்ற -தவறு செய்யாத**

**3. துறந்தார்க்கு - இல்வாழ்க்கை விடுத்து துறவறம் மேற்கொள்ளுதல்**

**4.மழித்தலும்- நீக்குதல்**

**5.உட்பகையும் - உடன் வாழும் பகைவர்**

**துறவின் வகைகள்:**

துறவு சமயத்தோடும் அறத்தோடும் பொருந்தியதும் கடவுளால் வழிநடத்தப் படுவதாக கருதப்படுவதுமான செயல் ஆகும். மேலும் துறவி தான் கடவுளின் சித்தத்தை செய்யும் ஓர் கருவியே ஆகும் என மக்கள் எண்ணுகின்றனர். துறவு இருவகைப்படும். ஒன்று உலகை நீத்துக் குடும்பச் சமுதாயத் தொடர்புகளனைத்தையும் விட்டு விலகிப் பொருள் அனைத்தையும் துறந்து அரசியலிலோ, கலைகளிலோ, காமத்திலோ ஈடுபடாது கடவுளுக்கு மட்டும் பணிபுரியும் நிலையாகும். மற்றவை உலகிலிருந்தே துறவைக் கடைபிடிப்பது.

கடவுளால் படைக்கப்பட்டவையனைத்தும் கடவுளின் கருவிகளே எனக் கருதித் தன் தொழிலின் மூலமாகவும் சிறந்த குடும்ப வாழ்க்கையின் மூலமாகவும் கட்டுப்பாடு நிறைந்த நன்னடத்தை மூலமாகவும் ஒருவன் தன் கடமைகளனைத்தையும் தேவ சித்தப்படி செய்து கடவுளுக்கு பெருமையளிக்க எண்ணுவதாகும்.

**போலித்துறவிகள்:**

அக்காலத்திலே துறவிகளுக்கிருந்தச் செல்வாக்கைச் சில சோம்பேறிகளும், வஞ்சகர்களும் பயன்படுத்திக் கொள்ள தொடங்கினர். உழைத்து உயிர்வாழ்வதை விட்டுத் துறவி வேடம் பூண்டு பொதுமக்களை ஏமாற்றி வாழத் தொடங்கினர். இத்தகைய நிலை வள்ளுவர் காலத்திலேயே தோன்றிவிட்டது. ஆதலால் அவர் போலித் துறவிகளின் வஞ்சக வேடத்தை கண்டிக்கின்றார்.

**தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம் அதனை**
**அஃதிலார் மேற்கொள் வது (குறள் எண்-262)**

என்ற குறளின் மூலமாக தவக்கோலம் உண்மையான தவம் புரிவோர்க்கே பொருத்தமானதாகும். உண்மையான தவத்திலே ஈடுபடாதவர்கள் அந்த தவக் கோலத்தை மேற்கொண்டிருப்பது வீணாகும். துறவிக் கோலம் தரித்தவர்களையெல்லாம் உண்மையான துறவிகள் என்று நம்பிவிட வேண்டாம். அவர்களுடைய சொற்களை நம்பிச் செல்வத்தையிழந்து ஏமாற வேண்டாம். போலித்துறவிகளை பொய்க் கோலம் பூண்டவர்களை சமுதாயத்தை விட்டு விரட்டியடியுங்கள் என்று இக்குறளால் அறிவுறுத்தினார் வள்ளுவர்.

**நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல் (குறள் எண்-276)**

மனத்தில் உள்ள ஆசைகளை துறக்கமாட்டாமல் துறந்தாரைப் போல் வஞ்சகமாக நடிப்பார்கள். இவர்களைப் போல் இரக்கம் அற்றவர்கள் வேறு எவருமே இல்லை.

மேலும்,

**மனத்தது மாசாக, மாண்டார் நீ ராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர் (குறள் எண்-278)**

என்ற குறளின் மூலம் உள்ளத்திலே ஆசை, கோபம், அறியாமை என்னும் குற்றங்கள் நிரம்பியிருக்கும். வெளியே குற்றமற்ற பெருமையுள்ளவர்களைப் போல நடிப்பார்கள். நீராடி தவ வேடத்திலே மறைந்து வாழ்வார்கள். இத்தகைய மக்கள் பலர் உண்டு.

**துறந்தார்க்கு துப்பரவு வேண்டி மறந்தார் கொல்**
**மற்றை யவர்கள் தவம் (குறள் எண்-263)**

என்ற குறள் மூலமாக வள்ளுவர் துறவியர்க்குப் பணி செய்யும் பாங்கினை உயர்த்திப்

பேசுகின்றது. வள்ளுவ வாக்கிற்கேற்ப துறவியர்க்கு பணிவிடை செய்ய செல்லும் இல்லறவியலார் எதிர்கொள்ளும் சிக்கல்கள் இன்றைய நாளேடுகளின் தலைப்புச் செய்திகளாக நாளும் இடம் பெறுகின்றன. துறவு என்பது காமுகர்களின் போர்வையாகி விட்டது. பொதுவாக அனைத்து மதங்களிலும் துறவு என்பது காமுகக் கூடாரம். கடத்தல் கும்பல், போதை அடிமைகள் என்றாகிவிட்டது.

இறை நம்பிக்கை, தியான ஈடுபாடு போன்றவற்றால் மனஇறுக்கம் போக்க முடியும் என்று நம்பி வரும் மக்களை மூளைச்சலவை செய்து தங்களின் காமகளியாட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதே இவர்களின் நோக்கம். பெருஞ்செல்வந்தர் சிலரும், அதிகார வர்க்கத்தினர் சிலரும் இவர்களோடு மகிழ்வான மகிழ்ச்சிக்காகக் கை கோர்த்துக் கொள்வதால் இவர்கள் எளிதில் சட்டத்தில் பிடியிலிருந்து தப்பி விடுகின்றனர். இவர்களிடம் பாலியல் வன்முறைக்கு ஆட்படும் மகளிர் மரபென்றும், மானம் என்றும் பேசிக் கொண்டு சீரழிக்கின்றனர் என்று ப.ஜீவானந்தம் குறிப்பிடும் கருத்து வெளிச்சத்தில் மதங்களின் இருளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தற்போது நம் நாட்டின் சீரழிவிற்குரிய முக்கிய காரணிகளுள் ஒன்று இத்தகைய துறவு வாழ்க்கையும், துறவியரும் தான். தவம் துறவு என்ற போர்வையில் மக்களிடமிருந்து பணத்தை கறப்பதும், மக்களை மூடநம்பிக்கைக்கு உள்ளாக்கியும், பெண்களை பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கியும் சமுதாயத்தை சீரழித்துக் கொண்டிருக்கின்றனர். துறவின் நோக்கமே, உலகிலுள்ள துன்பங்களினின்றும் தப்புவதற்காக மட்டுமின்றி, ஆன்மீக உயர்வு கருதியும், உலகப் பற்றை துறப்பதன் மூலம் கடவுளைக் குறித்த அறிவைப் பெறுதல் கூடும் அல்லது கடவுளுடன் ஐக்கியமடைதல் கூடும் என்ற நம்பிக்கை காரணமாகவும், துறவின் மூலம் நிலையான வீட்டின்பத்தைப் பெறுதல் கூடும் என்ற கொள்கை காரணமாகவும் மக்கள் துறவு மேற்கொள்ளல் உண்டு வள்ளுவர் கூறும் துறவின் நோக்கம் நிலையான வீட்டின்பத்தை அடைதலே ஆகும் என்கிறார்.

**உண்மைத்துறவு:**

உண்மைத்துறவுகள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் இவை என்பதை வள்ளுவர் கூறியிருக்கின்றார். எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் உடம்பை கொழுக்க வைக்கும் புலால் போன்ற உணவுகளை நீக்கி விடுதல், தவம் புரிதல், தீயொழுக்கங்களைத்

துறத்தல், பிறர் பொருளை களவாடாமல்; இருத்தல், உண்மையுரைத்தல், சினத்தை விட்டுவிடுதல், யாருக்கும் துன்பம் செய்யாமை, பிற உயிர்களைக் கொலை செய்யாமல் வாழ்தல், உலக இன்பம் நிலையற்றது என்பதை ஆராய்ந்து காணல், ஆசையை அடியோடு விட்டுவிடுதல், இன்று நாம் அனுபவிக்கும் இன்பத் துன்பங்களுக்கெல்லாம் முன் செய்த வினையே காரணம் என்று நம்புதல் இவைகள் எல்லாம் துறவிகளின் ஒழுக்கங்கள் ஆகும்.

**மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை (குறள்.244)**

என்ற குறளில்; உலகிலே வாழ்கின்ற மற்ற உயிர்களைப் பாதுகாத்து, அருள் உள்ளவராய், அவ் உயிர்களிடத்தில் இரக்கம் உள்ளவராய் வாழ்கின்றவர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை. தன் உயிர்க்கு ஆபத்து வருமோ என்று அஞ்சுகின்ற நிலை ஏற்படவே இடமில்லை. இவர்கள் ஏனையோர் இன்புற்று வாழும் பொருட்டுத் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் உழைப்பார்கள்.

மேலும்,

**உற்றுநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு (குறள்.261)**

என்ற குறளின் மூலம் தனக்கு வந்த துன்பத்தைத் தாங்கிக் கொள்வது, ஏனைய உயிர்களுக்கு எவ்வகையான துன்பங்களையும் செய்யாமல் இருப்பது அவ்வளவே தவத்தின் உருவகமாகும். உண்மையான தவம் துறவிகள் பின்பற்ற வேண்டிய தவம் தவத்திற்கு அடிப்படையான ஒழுக்கம் ஆகும்.

இந்த இரண்டு குறள்களின் கருத்துக்களுக்கு இலக்கியமாக இருப்பவர்கள் சன்னியாசிகளாக இருந்தாலும் சரி குடும்பத்தினராயிருந்தாலும் சரி, தனித்து நின்று பொதுப்பணி புரிகின்றவர்களாயினும் சரி, அவர்களே உண்மையான துறவிகள்.

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழிந்து விடின் (குறள்.280)**

உலகத்தார் வெறுத்துப்பழிக்கும் கெட்ட நடத்தைகளை விட்டுவிட்டால் போதும். அதுவே உயர்ந்த ஒழுக்கமாகும். தலையை மழுங்க மொட்டையடித்துக் கொள்ளுதல் அல்லது தலைமயிரை நீட்டி வளர்த்து சடையாக்கிக் கொள்ளுதல் போன்ற வெளி வேடங்கள்

வேண்டுவதில்லை. அவர்களுக்கு வேண்டியது தூய்மையான மனமும் நடத்தையுமேயாம். புறக் கோலங்களால் பயன் ஒன்றும் இல்லை.

தற்போது காவிநிறம்; வெண்மைநிறம் போன்ற உடையணிந்து, கழுத்தில் மற்றும் கையில் மணி மற்றும் மலர் மாலைகளை கொண்டும், நெற்றியில் மற்றும் உடல் முழுவதும் பூசைப் பொருட்களை பயன்படுத்தியும் வெளிவேடம் பூண்டு சமுதாயத்தை சீரழிப்பவர் பலர்.

**தேசத்துரோகிகள்:**

உள்நாட்டுக்குள் நடைபெறும் இனப் போர்களில் படைபலமற்றவர்கள் சரணடைய வரும்போது அவர்களைக் கொன்றழிக்கும் தேசத்துரோகங்களும் நிகழ்ந்து வருவதை மனித சமூகம் மறந்துவிடவில்லை. தேசத்துரோகம் குறித்தும் வள்ளுவர்,

**பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி கூறும். (குறள்.639)**

என்னும் குறள்வழி சுட்டுகிறார். இன்றும் நவீன காலத்திற்கு ஏற்ப குள்ள நரிகளாக அரசு, அரசியல் துறைகளில் சிலர் செயல்பட்டு ஆளும் அரசுக்குக் குந்தகம் விளைவிக்க முயல்வதைக் காணமுடிகிறது. இத்தகைய துரோகிகளைப் பக்கத்தில் வைத்திருப்பது எழுபது கோடி பகைவருக்குச் சமம் என்று குறிப்பிடுகிறார். மட்டுமின்றி, உலகின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசு, அரசியல், தனிமனித வாழ்வு என அனைத்து துறைகளிலும் ரகசிய பாதுகாப்பு முக்கியமானதாகும். அதனைப் பிறருக்குக் கூறும் துரோகச் செயல் நிகழ்த்துபவரை வள்ளுவர்,

**அறைபறை அன்னர் கயவர் தாம் கேட்ட**
**மறை பிறர்க்கு உய்த்து உரைக்கலான். (குறள்.1076)**

என்று சுட்டுகிறார். இதைத்தான் கூட இருந்து குழிபறித்தல் என்பர். இஃது பணம், பொன், மண், பெண் இவைகளுக்காகவும் நடக்கின்றது. இத்தகைய துரோகிகளை ஆரம்பக் காலத்திலேயே நம் மதிநுட்பத்தாலும் அவர்களது செயல்களாலும் ஆய்ந்தளிதல் வேண்டும்.

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்வேந் தலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு. (குறள்.735)**

அதாவது பலவகைமாறுபட்ட கருத்துகளையுடைய சுயநலக் கும்பல்களும், நாட்டை

நாசமாக்கும் உள்நாட்டு விரோதிகளும் வேந்தனை துன்புறுத்தும் கொலைகாரக் குறுநில மன்னர்களும் இல்லாத நாடே சிறந்த நாடாகும்.

பலவகையான கருத்து வேற்றுமைகளைக் கொண்ட சிறு கும்பல்களால் நாட்டுக்கு நன்மையில்லை. இத்தகைய நாட்டிலே ஆக்க வேலைகள் அமைதியுடன் நடைபெற மாட்டாது. நாட்டின் நலத்தை குறிக்கோளாகக் கொண்ட அரசியல் கட்சிகள் இருக்கலாம். நாட்டு மக்களின் வாழ்வைப் பற்றி கவலைப் படாமல் தங்கள் நலத்தையே நாடுவோர் உண்டு. தங்களுக்கு பெருமையும் புகழும் செல்வமும் தேடிக் கொள்வதற்கே பொதுப் பணியாளர் என்று நடிப்போர் உண்டு. இவர்கள் அரசியல் போர்வையிலே, சமுதாயப் போர்வையிலே, மதப் போர்வையிலே, இனப் போர்வையிலே, மொழிப் போர்வையிலே புகுந்து கொண்டு நாட்டின் ஒற்றுமைக்கு உலைவைப்பார்கள். இக்கும்பல்களால் நாட்டுக்கு நலம் இல்லை. இக்கும்பல்கள் வளர்வதற்கு இடம் தரக்கூடாது. இவர்களுக்கு அடுத்தபடி நாட்டை நாசம் பண்ணுகிறவர்கள் தேசிய பற்று இல்லாதவர்கள் இவர்கள் நாட்டை பற்றி நாட்டு மக்களை பற்றி எள்ளுள வேணும் கவலைப்பட மாட்டார்கள் எப்படி ஏனும் தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பார்கள் இவர்கள் சமயம் வரும்போது நாட்டின் உரிமையை பலி கொடுக்கவும் தயங்க மாட்டார்கள் தேசிய செல்வத்தை வளர்ப்பதற்கு துணை செய்ய மாட்டார்கள் தேசிய திட்டங்களுக்கு எல்லாம் எதிர்ப்பாக இருப்பார்கள் இவர்கள் எல்லாம் உள்நாட்டின் பகைவர்கள் இவர்களாலும் நாட்டின் செல்வம் நாசமாகும் சுயநலம் உள்ள கும்பல்கள் உள்நாட்டு துரோகிகள் இவர்களால் தான் ஒரு நாட்டில் செல்வம் கெடும் என்பதற்கு நமது நாட்டு வரலாறு உதாரணமாக விளங்குகின்றது

**தொகுப்புரை**

மனித இயற்கை மீறிய இத்தகைய பொறுமையும் பண்பும் உள்ளவர்களே உண்மையான துறவிகளா உண்மையான தவத்தில் ஈடுபடாதவர்கள் அந்த தவக்கோளத்தை மேற்கொண்டிருப்பது வீணாகும் உலகத்தார் வெறுத்து பலிக்கும் கெட்ட நடத்தைகளை விட்டுவிட்டால் போதும் அதுவே உயர்ந்த ஒழுக்கமாகும் தேச துரோகிகள் சமயம் வரும்போது நாட்டின் உரிமையை பலி கொடுக்கவும் தயங்க மாட்டார்கள் தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பார்கள் அரசு என்பது சட்டம் இயற்றி அதனை நடைமுறைப்படுத்தி மதங்கள் அனைத்து மக்களை நல்வழிப்படுத்தி ஒழுக்கம் உடன் வாழ வைப்பதற்கு எந்த மதத்தினரும் கூறுகிறார்கள் என்று பாராமல் கூறும் கருத்துக்கள் என்னவென்று மனதில் கொண்டு அனைவரிடமும் அன்பு கொண்டு ஒழுக வேண்டும்

**துணைநூற் பட்டியல்**

1.பேரா.சாலமன் பாப்பையா திருக்குறள் உரையுடன் கவிதா பப்ளிகேஷன் பதிப்பு :5 2014

2.யோகி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார் திருக்குறள் இன்பம் தனலெட்சுமி பதிப்பகம் பதிப்பு :3இ 2009

3. பேரா. கவ்யா சண்முகசுந்தரம் திருக்குறள் காவ்யா உரை காவ்யா பதிப்பகம் பக்கங்கள் :293 பதிப்பு :1:2012